**21.06.2023. OS. 04 /2018** பி.வா.சா.1 - அன்பழகன்

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

தாவா சொத்து அங்கப்பபிள்ளை என்பவருக்கு கிரைய பாத்திய சொத்து. அவருக்கு ஒரே மகன் சித்திகணபதியாபிள்ளை. சித்திகணபதியாபிள்ளைக்கு 3 மகன்கள், அங்கமுத்து, வல்லத்தரசு, பாண்டியன் ஆகியோர். பாண்டியனுக்கு ஆண் வாரிசு இல்லை. வல்லத்தரசு எனது அப்பா. அங்கமுத்து பிள்ளையின் ஆண்வாரிசுகள் தான் வாதிகள். எனது பாட்டனார் அங்கப்பபிள்ளை 09.01.1947ம் தேதி ஒரு உயில் சாசனம் எழுதி வைத்தார் அது இந்த வழக்கில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அங்கப்பபிள்ளையின் மகள்களான கல்யாணி, சின்னம்மாள் ஆகியோருக்கு மேற்படி உயில் படி ஏ, பி ஷெட்யூல் சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கப்பபிள்ளைக்கு பாத்தியமான மற்ற சொத்துக்களை அவருடைய மகனுடைய பேரன்களில் ஆண்வாரிசுகள் மட்டும் அனுபவித்துக்கொண்டு எல்லா உரிமைகளும் கொடுக்கப்பட்டுள்ளது. நான் 3ம் பிரதிவாதிக்கு 26.09.2012ம் தேதி எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தில் வா.சா.ஆ.1 உயில் பிரகாரம் கிடைத்த சொத்தை விற்பனை செய்துள்ளேன். 3ம் பிரதிவாதி தாவா சொத்தில் அவரது தகப்பனார் காலத்திலிருந்து வாடகைதாரராக இருந்து வருகிறார். நான் 2012ம் ஆண்டு கிரையம் கொடுத்த விபரம் வாதிகளுக்கு 2014 டிசம்பர் மாதம் தெரியவந்தது. வா.சா.ஆ.1 உயில் படி எனக்கு மட்டும் தனிப்பட்ட பாத்தியம் இல்லை என்றும், வாதிகளுக்கும் பங்குள்ளது என்று சொன்னால் சரியல்ல. நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள உடன்படிக்கை 22.08.1976, 22.09.1996 என் கைவசம் உள்ளது. மேற்படி தேதியில் உடன்படிக்கை ஏற்படவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு உடன்படிக்கைபடி வேறு பல சொத்துக்கள் கிடைத்ததாக நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன் ஆனால் அது என்னென்ன சொத்துக்கள் என்று எனக்கு தெரியாது. 28.09.1988 உடன்படிக்கையின் படி 1ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா தான் வாடகையை 28.09.1988க்கு பிறகு 3ம் பிரதிவாதியிடம்

வாடகை வசூல் செய்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா 3ம் பிரதிவாதியிடம் வாடகையை வாங்கவில்லை, எனது அப்பா சிங்கப்பூர் சிட்டிசனாக இருந்ததால் வாடகையை வாங்கவில்லை, நான் தான் வாடகையை வாங்கினேன். நான் வாடகை வசூல் செய்தது சம்மந்தமாக வாடகை ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நிருபணவாக்குமூலத்தில் உள்ள மற்ற விசயங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் பாத்தியமில்லை.